செ.வெ.எண்: 33/மே நாள்: 17.05.2016

# இராமநாதபுரம் மாவட்டம்

# சட்டமன்ற பொதுத்தேர்தல் 2016 தேர்தல் வாக்கு எண்ணும் மையமான அண்ணா பல்கலைக்கழக பொறியியல் கல்லூரியில் மூன்றடுக்கு காவல்துறை பாதுகாப்பு போடப்பட்டுள்ளது

## மாவட்ட தேர்தல் அலுவலர் / மாவட்ட ஆட்சித் தலைவர் முனைவர்.ச.நடராஜன்,இ.ஆ.ப., அவர்கள் தகவல்

சட்டமன்ற பொதுத்தேர்தல்-2016 வாக்கு எண்ணும் மையமான அண்ணா பல்கலைக்கழக பொறியியல் கல்லூரி வளாகத்தில் இன்று (17.05.2016) மாவட்ட தேர்தல் நடுத்தும் அலுவலர் மற்றும் மாவட்ட ஆட்சித் தலைவருமான முனைவர்.ச.நடராஜன்,இ.ஆ.ப., அவர்கள், சட்டமன்ற தொகுதி வாரியாக பாதுகாப்பு அறையில் வைத்து முத்திரை வைக்கும் பணிகளை பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

அதன்பின்பு மாவட்ட தேர்தல் நடுத்தும் அலுவலர் மற்றும் மாவட்ட ஆட்சித் தலைவருமான முனைவர்.ச.நடராஜன்,இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்ததாவது:

இராமநாதபுரம் மாவட்டத்தில் சட்டமன்ற பொதுத்தேர்தல் 2016-க்கான வாக்குப்பதிவு 16.05.2016 அன்று காலை 7.00 மணிக்கு தொடங்கி மாலை 6.00 மணி வரை அமைதியான முறையில் நடைபெற்றது. வாக்குப்பதிவு முடிந்தவுடன் மின்னணு வாக்குப்பதிவு இயந்திரங்கள் அனைத்தும் காவல்துறை பாதுகாப்புடன் வாக்கு எண்ணும் மையமான இராமநாதபுரம் அண்ணா பல்கலைக்கழக அரசு பொறியியல் கல்லூரியில் பாதுகாப்பான முறையில் கொண்டு சேர்க்கப்பட்டுள்ளது. சட்டமன்ற தொகுதி வாரியாக மின்னணு வாக்குப்பதிவு இயந்திரங்கள் அனைத்தும் தனித்தனியாக பாதுகாப்பு அறையில் வைக்கப்பட்டு தேர்தல் பார்வையாளர்கள் மற்றும் தேர்தல் வேட்பாளர்கள் / வேட்பாளர்களின் பிரதிநிதிகள் ஆகியோர் முன்னிலையில் முத்திரையிடப்பட்டுள்ளது. 24 மணி நேரமும் CCTV கேமரா மூலம் தொடர்ந்து கண்காணிக்கப்பட்டு வருகிறது. வாக்கு எண்ணும் மையத்திற்கு மூன்றடுக்கு காவல் பாதுகாப்பு போடப்பட்டுள்ளது. வாக்கு எண்ணும் நாளான 19.05.2016 அன்று மொத்தம் 600 காவல்துறை அலுவலர்கள் பாதுகாப்பு பணியில் ஈடுபடுத்தப்படவுள்ளனர் என மாவட்ட தேர்தல் நடுத்தும் அலுவலர் மற்றும் மாவட்ட ஆட்சித் தலைவருமான முனைவர்.ச.நடராஜன்,இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்தார்.

இந்த ஆய்வின் போது, திருவாடானை சட்டமன்ற தொகுதிக்கான தேர்தல் செலவின பார்வையாளர் திரு.ராஜசேகர், மாவட்ட காவல் கண்காணிப்பாளர் திரு.என்.மணிவண்ணன்,இ.கா.ப., மாவட்ட வருவாய் அலுவலர் திரு.மு.அலி அக்பர்,இராமநாதபுரம் மாவட்டத்திலுள்ள சட்டமன்ற தொகுதிகளுக்கான தேர்தல் நடத்தும் அலுவலர்கள் (பரமக்குடி) டாக்டர்.ஜி.எஸ்.சமீரன்,இ.ஆ.ப., (இராமநாதபுரம்) திரு.ராம்பிரதீபன், (திருவாடானை) திரு.ராஜசேகரன், (முதுகுளத்தூர்) திரு.ராமையா, பொதுப்பணித்துறை உதவி செயற் பொறியாளர் திரு.குருதிவேல்மாறன் உட்பட அரசு அலுவலர்கள் உடனிருந்தனர்.

**வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், இராமநாதபுரம்**
**புகைப்படம்: மின்னஞ்சலில் அனுப்பப்பட்டுள்ளது.**